## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 45/2025 |
| Prosecution Witness | : | **அ.சா.5** |
| Name | : | **செந்தில்ராஜா (சிறப்பு உதவி ஆய்வாளர்)** |
| Father's / Husband Name | : | **தேசிங்கராஜன்** |
| Address | : | **பாளையம், பெரம்பலூர்.** |
| Age | : | 46/2025 |

**தேதி : 21.01.2026**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.ச. மோகனபிரியா சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது பெரம்பலூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 30.10.2024ம் தேதி நான் பெரம்பலூர் காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், ஏகாம்பதேஷ்வரர் மற்றும் தண்டாயுதபாணி கோவில் செயல் அலுவலர் திருமதி. ஹேமாவதி கொடுத்த புகாரின் பேரில் நிலைய மனு ரசீது எண். 1182/2024 என்ற மனுவின் அடிப்படையில் நிலைய குற்ற எண். 826/2024 சட்டப்பிரிவுகள் 191(2), 296(b), 132 BNS ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **அந்த மனு ரசீது அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கடந்த 02.11.2024ம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு புகார்தாரர் ஹேமாவதி தவிர வேறு ஏதேனும் புகார்கள் வந்ததா அந்த தேதியில் வேறு எந்த புகாரும் வரவில்லை. சம்பவம் நடந்த நேரம் பற்றி புகாரில் குறிப்பிட்டுள்ளார்களா என்றால் குறிப்பிட்டுள்ளார். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை 22.11.2024 அன்றுதான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பிய அன்றே சாட்சிகளின் வாக்குமூலங்கள் மாதிரி வரைபடம், பார்வை மகசர் மற்றும் எதிரிகளை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தேனா என்றால் இல்லை. நான் முதல் தகவல் அறிக்கை மட்டும்தான் பதிவு செய்தேன்.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1(FAC)
Perambalur.